# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## விசேட வியாபாரப்பண்ட அறவீடு (திருத்தம்)

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இரான் விக்கிரமரத்ன அவர்களால்*
*2023, யூலை மாதம் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, யூலை மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **189 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** இவ்வாசகத்தின் மூலம் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் அல்லது 5 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி அமைச்சரினால் ஆக்கப் பட்ட ஏதேனும் கட்டளை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதன்மேல் மட்டுமே வலுவுக்கு வரும் என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை இச்சட்டமூலம் திருத்துகின்றது.

## 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின்          ஆம் இலக்க, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு, அதன் (i) முதல் (iv) வரையிலான பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, அதன் (i) முதல் (ii) வரையிலான பந்திகளாகப் பயனுறவேண்டிய பின்வரும் புதிய பந்திகளை இத்தாற்றிருத்தப் படுகின்றது:-

" (i) வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதலும் வேண்டும்;

(ii) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல் மட்டுமே செயல் வலுவுக்கு வருதல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.